C.S.I. CHRIST CHURCH
TRICHY ROAD, COIMBATORE -18.

# C.S.I கிறிஸ்துநாதர் ஆலயம்

1558, திருச்சி ரோடு, கோயமுத்தூர் – 641 018.

## ஆகஸ்ட் மாத இதழ்
## 2025

உன்
பொருளாலும், உன் எல்லா விளைவின்
முதற்பலனாலும் கர்த்தரைக்
**கனம் பண்ணு.**

*நீதி 3:9*



Phone : 0422 - 2214403
E-mail : christchurchcbe@gmail.com
Telefax : 0422 - 2305155
Website : christchurchcbe.org

# C.S.I கிறிஸ்துநாதர் ஆலயம்

**1558, திருச்சி ரோடு, கோயமுத்தூர் – 641 018.**

## புதிதாக பொறுப்பேற்றுள்ள போதக சேகர கமிட்டி 2025–2028

















# C.S.I கிறிஸ்துநாதர் ஆலயம்

1558, திருச்சி ரோடு, கோயமுத்தூர் – 641 018.




## புத்தகத்தின் உள்ளே...


02 மேய்ப்பனின் குரல்

04 ஆயரின் செய்தி

08 மறையுரை

11 ஆலய செயலாளர் மடல்

13 ஆலய பொருளாளர் மடல்

15 ஒவ்வொரு நாளும் ஒரு ஜெபக்குறிப்பு

21 ஆகஸ்ட் மாத ஆராதனை ஒழுங்குகள்

23 பிறந்தநாள் கொண்டாடுவோர்

27 திருமண நாள் கொண்டாடுவோர்

29 திருமண நாள் கொண்டாடுவோர்

30 Accounts

31 பெண்கள் ஐக்கிய சங்கம்

34 வாலிபர் ஐக்கிய சங்கம்

36 வேதவினாப் போட்டி

39 திருமறை தேர்வு

41 திருமறை ஆய்வு

43 வெளிநாட்டு செய்திகள்

44 உள்நாட்டுச் செய்திகள்



பத்திரிக்கை ஆசிரியர்

திரு. J.P. ஜேக்கப் ஆலயச் செயலாளர்

1558, திருச்சி ரோடு, கோயமுத்தூர் - 641 018.

செல் : 79043 26930

அச்சிடுவோர் :

JOHN Graphics ஜாண் ஃகிராபிக்ஸ்

175, Nathan Complex, 6th Street, Gandhipuram,

Coimbatore - 641 012. Ph : 0422 4216874, 99941 56874


INTERNAL - CIRCULAR FOR CHURCH MEMBERS TO PRAY

# மேய்ப்பனின் குரல்....

**நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள், இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபி 13:16.**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய பெயரில் வாழ்த்துக்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் இம்மாதம், ஆகஸ்ட் 17, 2025 ஞாயிறு அறுப்பின் பண்டிகை, சேர்ப்பின் பண்டிகை தோத்திரப் பண்டிகையை கொண்டாட உள்ளோம். கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளை நினைவில் கொண்டு இந்த வருட அறுப்பின் பண்டிகையினை ஜெபத்தோடும் நினைவு கூறுவோமாக.

உன் திராணிக்குத் தக்கதாய் தர்ம சிந்தையுள்ளவனாயிரு. உனக்கு மிகுதியாய் இருந்தால் மிகுதியாய் கொடு. உனக்குக் கொஞ்சமிருந்தால் அந்த கொஞ்சத்தில் சந்தோசமாய் கொடுக்க ஜாக்கிரதையாயிரு. இப்படி செய்வதினாலே அவசியம் வருங்காலத்திற்கு நற்பலனைக் கூட்டி சேர்க்கிறாய்.

தோபித்து என்னும் நூல் பழைய ஏற்பாட்டுப் பகுதியான இணைத் திருமறைத் தொகுப்பைச் சேர்ந்த 7 நூல்களில் ஒன்றாகும். கி.மு. 721ல் யூதர்கள் அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டு அடிமைகளாக வாழ்ந்ததை காட்டுகிற நூல் ஆகும். மகனே, உன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவரை நினை, பாவம் செய்யாதே, கட்டளைகளை மீறாதே, நீதியைக் கடைப்பிடி, உன் உடைமையிலிருந்து தருமம் செய். தருமம் செய்யும் போது முகம் கோணாதே. ஏழை எளியவரிடமிருந்தும் உன் முகத்தை திருப்பிக் கொள்ளாதே. அவ்வாறு செய்தால் ஆண்டவரும் தம் முகத்தைத் திருப்பிக் கொள்வார் என்று தகப்பன் தன் மகனுக்கு ஆலோசனை கூறுகிறார். மேற்கண்ட இந்த வசனத்தில் தர்ம சிந்தை வேண்டும், திராணிக்குத்தக்கதாக கொடுக்க வேண்டும். மிகுதியாயிருந்தால் மிகுதியாயும் கொஞ்சம் இருந்தால் கொஞ்சமாயும், சந்தோஷமாயும் கொடுக்கவும் சொல்லப்பட்டிருக்கிறது.

## 1. தர்ம சிந்தையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்

2 இரா 4:9 சூனேமியாள், தன் புருஷனை நோக்கி.... தேவனுடைய மனுஷனாகிய எலிசாவுக்கு நமது வீட்டின் மெத்தையின் மேல், ஒரு சிறிய அறை கட்டில் மேசை நாற்காலி வைத்து அவருடைய ஊழியத்திற்கு உறுதுணையாய் இருப்போம்

என்று எந்த ஒரு ஆதாயமும் எதிர்பாராமல் கொடுக்க முன்வருகிறாள். மேலும் எலிசா அந்த பெண்ணுக்காக ராஜாவினிடத்திலாவது, சேனாதிபதியினிடத்திலாவது ஏதாவது உதவி செய்ய கேட்க வேண்டுமா என கேட்டபொழுது, என் ஜனத்தின் நடுவே சுகமாய் குடியிருக்கிறேன் என்று எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் கர்த்தரின் ஊழியத்திற்காக தன் இல்லத்தைக் கொடுத்தார்கள்.

**2. திராணிக்குத்தக்கதாக கொடுக்க வேண்டும்.**

2 கொரி 8ம் அதிகாரத்தில் மக்கெதோனியா நாட்டுத் திருச்சபை மக்கள் எருசலேமில் துன்புற்றுக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு தங்கள் திராணிக்குத் தக்கதாயும், திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே முன் வந்தார்கள். ரோமர் 15:26 எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கும் இருக்கிற தரித்திரருக்காக சிலவற்றிலும் சேமித்துக் கொண்டிருந்தார்கள். 2 கொரி 8:3. அவர்கள் தங்களின் திராணிக்கு தக்கதாய் கொடுத்தார்கள்.

மாற்கு 8:2, 3 நாட்கள் சாப்பிட ஒன்றுமில்லாது இயேசுவின் வார்த்தைகளைத் கேட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு உணவளிக்க இயேசு விரும்பினார். அவர்களிடமிருந்த 7 அப்பங்களையும் சில மீன்களையும், இயேசுவிடம் கொடுத்தார்கள். அவர் அதை ஆசீர்வதித்துக் கொடுத்தார். அனைவரும் உணவு உட்கொண்ட பின்பு 7 கூடைகள் நிறைய மீதம் எடுத்தார்கள்.

**3. கொஞ்சம் இருந்தால் கொஞ்சம் கொடுக்க வேண்டும்.**

அதிகம் இருந்தால் அதிகம் கொடுக்க வேண்டும். கொஞ்சத்தில் சந்தோஷமாய் கொடுக்க வேண்டும். மாற்கு 12:41-44 ஒருஏழை விதவை தன்னிடமிருந்து 2 காசுகளை ஆலயத்தின் காணிக்கைப் பெட்டியிலே போட்டாள். மற்றொன்றைக் காட்டிலும் இந்தப் பெண் அதிகமாய் கொடுத்தாள் என்று இயேசுவே பாராட்டுகிறார். 1 இராஜா 17 7-16 பஞ்ச காலத்திலே எலிசாவுக்கு உணவளிக்க சாறிபாத் ஊர் விதவையை அனுகின போது அவர்கள் தன்னிடம் கொஞ்சம் மாவும் கொஞ்ச எண்ணெயும் மட்டுமே உள்ளதாகவும் தனக்கும் தன் மகனுக்குமே போதாதவைகளாய் இருப்பதாகவும் தெரிவித்தார்கள் இந்த நிலையிலும் கர்த்தரின் ஊழியராகிய எலியாவுக்கு அதனை கொடுத்த போது கர்த்தர் பஞ்சகாலம் தீருமட்டும் பானையிலிருந்த மாவும் கலத்திலிருந்து எண்ணெயும் குறையாமல் இருக்கும்படி தேவன் ஆசீர்வதித்தார்

அன்பானவர்களே கர்த்தருக்கென்று நாம். மனப்பூர்மாய் கொடுக்கும் பொழுது கர்த்தர் நம்மை ஆசீர்வாதத்தோடு நம்மைக் கொண்டு அநேகரை ஆசீர்திக்கிறார். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
Rev. D. இராஜேந்திரக் குமார்
ஆயர் / தலைவர்
98427 82403

# ஆயர் செய்தி

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக
ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ,
அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.
கலாத்தியர் 3:27

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களைக் கடந்து எட்டாவது மாதமாகிய ஆகஸ்ட் மாதத்தில் நம் CSI கிறிஸ்து நாதர் ஆலய திருச்சபையாரை சந்திக்க ஆண்டவர் பாராட்டின அவர்தம் பேரருளுக்காக அவரைப் போற்றுகிறேன்.

திருச்சபையின் அடித்தளமான இரண்டு அருட்கொடைகள் (Sacraments) திருமுழுக்கு - திருவிருந்து ஆகியனவாகும். இவ்வருட்கொடைகளைக் குறித்து பல்வேறு தேவைகள் திருச்சபைக்கு இன்றும் இருக்கின்றன. திருமுழுக்கிற்கான நோக்கங்களையும் இறைத் திட்டத்தையும் வழிமுறைகளையும் தெளிவோடு அறிந்து கொள்வது இன்றைய திருச்சபைக்கு மிக முக்கியமானகடமையாக உள்ளது.



கும்ரான் சமூகம் என குறிக்கப்பட்ட கூட்டுறவிலிருந்து திருமுழுக்கு யோவானை குறிக்கப்படுகிறார். ஆசாரியர்களின் மரபில் அபியா வகுப்பைச் சார்ந்த சகரியாவின் புதல்வர் யோவான் திருமுழுக்குநர் ஆவார். யோவான் திருமுழுக்குநர் ஆசிரியர் மற்றும் இறைவாக்கினர் (தீர்க்கதரிசிகள்) ஆகிய இவ்விருவர் வரிசையிலும் தோன்றுகிறார். நமது ஆண்டவரும் ஆம், யோவான் இறைவாக்கினரிலும் மேன்மை உள்ளவர் என சாட்சி கொடுக்கிறார் (மத்தேயு 11:9, 21:26).

ஆசாரிய முறைமையின் அடையாளமாக தண்ணீரில் முழுக்காட்டுதல், கழுவுதல் போன்ற சடங்குகள் பயன்படுத்தப் படுவதாகும். திருமுழுக்கு சமயச்சடங்கன்று; ஆனால் அது அகத்தூய்மையே பெரியது என முன்னிறுத்துகிறது. இறைவாக்கினர்களைப் போலவே மனமாற்றத்தையே தம் ஊழியத்தின் சாரமாக யோவான் வெளிப்படுத்துகிறார். இஸ்ராயேல் மக்களின் மீட்பு உள்ளான தூய்மையை சார்ந்தது எனவும் மேசியாவின்

வருகையில் இந்த ஒழுக்க நெறியை ஏற்காதவர்கள் அழிந்து போவார்கள் என்றும் காலம் நெருங்கிற்று எனவே இறுதி காலநிகழ்ச்சிகள் உடனடியாக நிகழப்போகிறது தாமதத்திற்கு இடமில்லை எனவும் உறுதிப்படுத்துகிறார். *(மத்தேயு 3:11)*

பாப்திஸ்மா baptisma (βαπτιμα*) மத். 3:7, மாற்கு 1:4, 10:38, ரோமர் 9:4)* பாப்திஸ்திஸ் baptistes *(மத். 3:1 லூக் 7:23)* பாப்திசோ baptizo *(மத்.3:11, அப்போஸ்தலர் 8:38, 1 கொரி. 1:17)* என்னும் கிரேக்க சொற்கள் திருமுழுக்கு திருமுழுக்குநர் திருமுழுக்கு செய் என மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

எபிரேயத்தில் 'டாபல்' (tabal) என்பது தோய்த்தல் *ஆதி. 27:31; யாத்.12: 12:22 லேவி. 4:6)* முழுகுதல் *(2 இரா. 5:14)* என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு இணையான கிரேக்க சொல் பாப்டிசோ துவைத்தல், கழுவுதல் என்பது மாத்திரமல்ல இன்னமும் உருவகமாக இயேசுவின் பாடுகளையும் *(லூக்கா 16:38,39)* குறிக்கிறது.

தேரிந்தெடுக்கப்பட்ட மக்கள் பாவச் செயலால் தங்களை பிற இனத்தாராக்கிக் கொண்டனர். பிற இனத்தார் மதமாறி யூத சமயத்தை தழுவது போல வழுவிப்போன யூதரும் மனம்திரும்பி திருமுழுக்கை பெற வேண்டும் என யூத மக்களை இந்த திருமுழுக்கு பெற யோவான் அழைக்கிறார்.

## இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு

அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே,வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம் மேல் இறங்குகிறதையும் கண்டார். அன்றியும்,நீர் என்னுடைய நேசகுமாரன்,உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று,வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று *(மாற்கு 1:9-11)*.

மத்தேயு நற்செய்தியாளர் இயேசு தம்மிடத்தில் திருமுழுக்கு பெறுவதைக் குறித்து யோவான் தயங்கி நிற்கிறார் மத்தேயு *3:13*, என்றும் லூக்கா நற்செய்தியாளர் புறாவைப் போன்று தூய ஆவியார் ஓர் உருவம் கொண்டு இயேசுவின் மேல் இறங்குகிறதையும் குறிப்பிடுகிறார்.

இயேசு கிறிஸ்து யோவானால் ஏற்படுத்தப்பட்ட புத்தாக்கமும் புதிய ஆர்வமும் உள்ளதை பார்த்து, இவற்றிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ளாமல் இதில் இறை அழைப்பை கண்டு அதில் தான் செய்யவிருக்கும் பணிக்கு தம்மை அர்ப்பணம் செய்து *(லூக்கா 3:15 )*

பங்கு பெறுகிறார். தான் மீட்க வந்த மக்களிலிருந்து தம்மை பிரித்து ஒதுங்கிக் கொள்ளாமல் அவர்களின் வரிசையில் இருந்து திருமுழுக்கை பெற்றுக் கொள்கிறார்.

ஆனால் ஆண்டவரின் திருமுழுக்கோ தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். தூய ஆவியார் அவர் மேல் இறங்கினார். மேசியாவுக்கும் ஆவியாருக்கும் உள்ள தொடர்பை இறைவாக்கினர் யோவேல் முன்பே அறிவித்துள்ளார் (யோவேல் 2:28).

தூய ஆவியாரின் பலத்தால் இறை அதிகாரத்துடன் போதித்து பிசாசுகளை துரத்தினார். (லூக்கா 4:14, மத் 12:22). அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று,வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. (மாற்கு 1:11). இதில் அன்பு மகன் என்பது பழைய ஏற்பாட்டில் மேசியாவின் எதிர்பார்த்தலோடு தொடர்புள்ள கருத்தாகும் (சங்கீதம் 2:7).

ஆண்டவரின் உண்மை அடியாரே அன்பு மகன் என்பதையும்இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே, என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன், அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். ஏசாயா இறைவார்த்தையினால் தெளிவுபடுத்துகிறார் (ஏசாயா 42:1).

### திருமுழுக்கின் செம்பொருள்

1. தொடக்க காலத் திருச்சபையில் திருமுழுக்கு தான் திருச்சபை ஐக்கியத்தில் சேர்வதற்கான வழியாகும். (அப்போஸ்தலர் 2:38).

2. திருமுழுக்கு வழியாய் கிறிஸ்துவின் பாடுகளிலும் உயிர்த்தெழுதலிலும் பங்கு பெறுகிற உண்மைக்குள் இணைக்கப்படுகிறோம் (ரோமர் 6:1-11)

ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12).



3. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கோ தூய ஆவியார் அருளப்படுவதோடு இணைக்கப்படுகிற ஒன்றாக அப்போஸ்தல அருளுரை குறிப்பிடுகிறது (அப்.2:38).

திருமுழுக்கு ஆவியால் அருளப்படும் முத்திரை என கொரிந்து திருச்சபைக்கு பவுல் அடிகளார் அறிவுறுத்துகிறார். (2 கொரி. 1:22). மேலும் திருமுழுக்கானது மீட்பு நாளுக்காக நம்மை முத்தரிக்கிறது என்றும் குறிப்பிடுகிறார் எபேசியர் (1:13,14, 4:30).

4. திருமுழுக்கில் நற்செய்தி அறிவிப்பதும் இறைவார்த்தையை கேட்ட போது அவர்கள் குத்தப்பட்டதும் நடந்தேறியது (அப்போஸ்தலர்2:37) வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். (அப். 2:41, 8:12, 16:32,33).

திருமுழுக்கின் அதிகாரம் ரோம ஆட்சியாளர்களாலும் எபிரேய யூத மத தலைவர்களாலும் குற்றபடுத்தப்பட்டு கொடூரமான சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டவர் நம்முடைய ஆண்டவர்.

உயிர்த்தெழுந்த பின்பு தம் சீடர்களுக்கு சொன்ன வார்த்தை எல்லா அதிகாரங்களும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:18-19).

ஆண்டவரின் ஊழியத்தோடு இணைந்து இருந்து கிறிஸ்துவின் பாடு மரணம் உயிர்த்தெழுதலில் திருமுழுக்கின் வழியே பங்கு பெறுவதாக நாம் உணர்ந்து ஆண்டவரின் நற்செய்தி அறிவிக்க நாம் ஆயத்தப்படுவோம். இத்திறு மொழிக்கு நொடியே நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்து இருக்கிறார் என்று சாட்சி பகர நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் இத்தொனியை உணர்ந்தவராக இவ்வுலகத்திற்கு உள்ளாக நற்செய்தி அறிவித்து அனைவரையும் சீடராக்குவோம்.

ஆண்டவருக்கே எல்லா துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக.

இறைப்பணியில்
அருள்திரு. ஆ.சற்குணம்
உடன் ஆயர்
9486197877

## மறையுரை....

அனைவரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்

*"நானும் என் வீட்டாருமோவென்றால் ஆண்டவரையே சேவிப்போம்" (யோசுவா 24:15)*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வாழ்த்துக்கள்.

மனிதருக்குப் பணி செய்வதால் ஒருவருக்கு மன நிறைவும் அமைதியும் கிடைக்குமா என்று தெரியவில்லை. ஆனால் ஆண்டவருக்கு ஊழியம் செய்தால் நிச்சயம் ஆசீர்வாதம் உண்டு என்பதை உறுதியாக சொல்லலாம்.

யோசுவா 24 : 15 இல் ''ஆண்டவருக்கு ஊழியம் புரியுங்கள்'' என்னும் சிந்தனையைச் சற்று ஆழமாக சிந்தித்துப் பார்த்தோமானால் யோசுவா மக்களைப் பார்த்துச் சொல்வார் ஆண்டவருக்கு ஊழியம் புரிவது தீயது என்று உங்கள் பார்வைக்கு தோன்றினால், உங்கள் மூதாதையர் நதிக்கு அப்பால் பணிந்து வந்த தெய்வங்களுக்கோ, உங்கள் நாட்டில் உங்களுடன் வாழும் எமோரியரின் தெய்வங்களுக்கோ, இவர்களுள் யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்கள் இப்போது முடிவு செய்து கொள்ளுங்கள். ஆனால் நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம், என்று யோசுவா சொன்னதைக் கேட்டு இஸ்ரயேல் மக்கள், ''நாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் புரிவோம் அவரே எங்கள் ஆண்டவர்'' என்கிறார்கள்.



இஸ்ரேல் மக்கள் உண்மை தெய்வமான அவருக்கே பணிந்து, அவருக்கு மட்டுமே ஊழியம் செய்த நாட்களில் எல்லாம் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதே நேரத்தில் அவர்கள் யெகோவா இறைவனை மறந்து பிற தெய்வங்களை வழிபட்ட போது அசீரியர்கள், பாபிலோனியர்களால் நாடு கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானார்கள். ஆகையால் இஸ்ரயேல் மக்களின் வாழ்வும் தாழ்வும் அவர்கள் தெய்வத்திதற்கு பிரமாணிக்கமாக

இருந்து, அவருக்கு ஊழியம் செய்ததைப் பொறுத்து அடங்கி இருந்தது என்பதை நாம் மிக உறுதியாகச் சொல்லலாம்.

**1. ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் இறுதி வரைக்கும் விசுவாசம் இருக்க வேண்டும்.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய உடலையும் இரத்தத்தையும் உயிருள்ள உணவாக பானமாகச் சொன்ன போது அவருடைய சீடர்கள் சிலர், இது மிதமிஞ்சிய பேச்சாக இருக்கின்றதே, இதை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது? என்று சொல்லி, அவரை விட்டு பிரிந்து போகின்றார்கள். (யோவான் 6:66) அப்போது இயேசு கிறிஸ்து தனக்கு நெருக்கமாக இருந்த அப்போஸ்தலர்களிடம் நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா? என்று கேட்கின்றார். அதற்கு சீமோன் பேதுருவோ ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம், நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன (யோவான் 6:68) என்று சொல்லி பிரமாணிக்கத்தை வெளிப்படுத்தினார்.

அதன் பிறகு அப்போஸ்தலர்கள் இயேசுவோடு இறுதி வரைக்கும் உடனிருந்தார்கள் என்பது நாம் அறிந்த செய்தியாகும். ஆதலால் நாம் ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்றோம் என்று சொன்னால், அவருக்கு இறுதி வரைக்கும் பிரமாணிக்கமாய், விசுவாசமாய் இருக்க வேண்டும் என்பதுதான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதன்மையான செய்தியாக இருக்கிறது.

**2. ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் கீழ்ப்படிதல் இருக்க வேண்டும்.**

ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் இருக்கின்ற முக்கியமான உண்மை கீழ்ப்படிதல் ஆகும் . கீழ்ப்படிதல் என்று சொன்னால் ஆண்டவரின் வார்த்தைகளுக்கு அப்படியே கட்டுப்பட்டு நடத்தல் ஆகும்.பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் ஆபிரகாமைப் பார்த்து, நான் உனக்குக் காட்டும் ஊருக்குப் போ (ஆதியாகமம் 12:1) என்று சொன்னதும் அவர் எந்த ஒரு மறுப்பும் சொல்லாமல், அப்படியே போகின்றார். அந்த ஊரில் உள்ள மக்கள் எப்படி? அங்கு உயிர் வாழ முடியுமா? என்றெல்லாம் அவர் கேட்கவில்லை. ஆண்டவர் சொல்லிவிட்டார், அதனால் போவோம் என்று போகின்றார்.



இவ்வாறு அவர் கீழ்ப்படிதலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். ஆண்டவருக்கு நம்மையே அர்ப்பணித்து வாழும் வாழ்வில், கீழ்ப்படிதல் என்பது மிகவும் தேவையாக இருக்கின்றது. பவுலடியார் இதைத்தான் ''கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள்'' (எபேசியர் 5:21)என்று கூறுகின்றார்

ஆம் நாம் ஆண்டவருக்கு அஞ்சி கீழ்ப்படிந்து, நடக்கின்ற போது, அதனால் நம்முடைய வாழ்க்கையில் கிடைக்கின்ற ஆசீர்வாதங்கள் ஏராளம்.

**3. ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் அன்பு இருக்க வேண்டும்.**

ஆண்டவருக்கு நம்மையே நாம் அர்ப்பணித்து வாழும் பிரமாணிக்கமான வாழ்க்கையில் நம்முடைய மனதில் கொள்ள வேண்டிய உண்மை, அன்பு என்பதாகும்.

நம்முடைய உள்ளத்தில் அன்பில்லாமல், ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதனால் என்ன புண்ணியம் கிடைத்துவிடப் போகிறது? அன்பில்லாமல் நாம் தேவனுக்கு கீழ்படிந்து வாழ்ந்தோம் என்றால், அது பெயருக்கு அல்லது கடமைக்கு வாழ்கின்ற வாழ்க்கையாகிவிடும். மாறாக உள்ளத்தில் அன்பு கொண்டு ஆண்டவருக்கு நம்மை முழுமையாய் அர்ப்பணித்து, ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தோம் என்றால், நம்முடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும்.

பவுலடிகளார் ''கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல'' என்றொரு வார்த்தையை (எபேசியர் 5:25)இல் பயன்படுத்துகிறார். நாம் செய்கிற எந்தப் பணியினையும், யாரையும் கிறிஸ்து நம்மை அன்பு செய்தது போல அன்பு செய்தோம் என்றால், நம்முடைய அர்ப்பண வாழ்க்கை முழுமை பெறும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் கிடையாது.

நிறைவாக மனிதருக்கென்று ஊழியம் செய்யாமல் ஆண்டவருக்கு மட்டும் ஊழியம் செய்யும் மக்களாவோம், அதற்காக ஆண்டவருக்கு கீழ்ப்படிந்து, ஆண்டவர் மீது உண்மையான அன்பு கொண்டு, அவருக்காக நம்முடைய உயிரையும் இழக்கத் துணிவோம். அதின் வழியாக இறையருளை நிறைவாய்ப் பெற்றுக் கொள்வோம். தேவன் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

இறையவரின் இறைப்பணியில்
**அருள்திரு. ஜெ. சுரேஷ்குமார்**
உடன் ஆயர்
9677928677

# ஆலய செயலாளர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சி ரோடு C.S.I. கிறிஸ்து நாதர்ஆலய சபை மக்களுக்கும், எங்கள் JPJ & JAP அணியினரை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்பெயராலே எங்கள் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறோம்.

கடந்த 27.7.2025 தேர்தலில் போட்டியிட்ட 26 PC வேட்பாளர்களில் நமது அணியில் 10 பேரும் எதிரணியில் 3 பேரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் லேட்டாக நடைபெற்றதால் வருடந்தோறும் ஆகஸ்ட் 2வது வார அறுப்பின் பண்டிகை Harvest Festival ஆகஸ்ட் மாதம் 3வது வாரம் 17.08.2025 அன்று நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவது நமது தேவாதி தேவனுக்கே. மகிமையுண்டாவதாக. வருகிற 2025-28 ஆகிய 3 ஆண்டுகளும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய தேவன் தந்த வாய்ப்புக்காக நன்றி. பல்வேறு வாக்குறுதிகளை தந்திருக்கிறோம். அவைகள் அனைத்தையும் செய்து முடிக்க தேவ கிருபையும் உங்கள் ஒத்துழைப்பையும் எதிர்நோக்கியுள்ளோம்.

பெண்கள் ஐக்கிய சங்கம் ஆண்கள் ஐக்கிய சங்கம் ஒய்வுநாள் பள்ளி ஊழியம்- பாடகர் குழு இசை - மருத்துவ ஊழியம் - வாலிபர் ஐக்கிய சங்கங்கள் செயல்பட்டு ஆவிக்குரிய வளர்ச்சியில் மேன்மை பெற வேண்டும். புதிய சந்தாதாரர் அட்டை வேண்டுவோர் தினமும் ஆலய அலுவலக நேரத்தில் 9 to 5 pm வரலாம். உங்கள் குடும்பத்தின் மூலம் / மிஷனெரியை தாங்க விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

பண்டிகையை நமது ஆலயத்தில் இலவச மருத்துவ ஊழியத்தை வெற்றிகரமாக நடத்தி தந்த Dr. ஆனந்தராஜ் அவர்களின் குமாரன் திரு. அருண் ஆனந்தராஜ் - வெர்ஜினா தம்பதியினர் ரிப்பன் வெட்டி திறந்து வைப்பார்கள். 40 ஸ்டால்கள் மூலம் ஏற்கனவே கடந்த நாட்களில் விற்பனை செய்து Fund Raise பண்ணி தந்தவர்கள் இந்த ஆண்டும் அந்த சேவையை தொடர்ந்து செய்ய முன் வாருங்கள். புதிதாக ஸ்டால் வைக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

வெற்றி பெற்றவர்களின் போட்டோவும் மொபைல் எண்ணும் அச்சிட்டு Pocket ID Car-வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள்

குறைகளை எங்களோடு தொடர்பு கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.

செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கிற ஆலய பிரதிஷ்டை அசனப் பண்டிகைகளை சிறப்பாய் கொண்டாட திட்டமிடுங்கள். பொதுக்குழு கூட்டப்பட்டு உங்களனைவரது கருத்துக்களும் கேட்கப்பட்டு அவைகளில் நன்மையான வழிகளை தேர்ந்தெடுத்து சிறப்பாக ஆலய பண்டிகை - அசனப் பண்டிகை செயல்பட அனைவரும் எங்களுடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நடந்து முடிந்த தேர்தலில் வெற்றியை தந்த ஆண்டவருக்கும் வாக்களித்த உங்களுக்கும் எங்களோடு பயணித்த வாலிப தம்பிகளுக்கும் முதலாவது நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து கர்த்தருடைய நாமம் மீண்டும் இவ்வாலயத்தில் மகிமைப்பட அனைவரும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**தேவன் அற்புதங்களை செய்து**
**சபை மக்களை ஆசீர்வதிப்பாராக.**

GLORY BE TO JESUS

கிறிஸ்துவின் ஊழியன்
**J.P. JACOB**
செல் : 79043 26930

## சபை மக்களுக்கு ஒரு அறிவிப்பு

இனிய திருச்சபை மக்களே !

வருடம் முழுவதும் ஒவ்வொரு நாளும் சபை மக்கள் யாவரும் ஆலயத்தில் வந்து ஜெபிக்குமாறு நமது ஆலயத்தின் மேல் பகுதியில் (Balcony) தனி இடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே விருப்பம் உள்ளவர்கள் எல்லா நாட்களிலும் சிலமணி நேரம் ஒதுக்கி ஜெபிக்க அழைக்கிறோம்.




அன்பான திருச்சி ரோடு C.S.I. கிறிஸ்து நாதர்ஆலய சபை மக்களே, எங்கள் JPJ & JAP அணியினரை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களே, உங்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் நற்பெயராலே வாழ்த்துகிறேன்.

எத்தனையோ தடைகள், போராட்டங்களை மீறி தேவன் எங்கள் அணியைச் சேர்ந்த 10 வேட்பாளர்களை தேர்வு செய்தார். அவருடைய சுத்த கிருபைக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவோம்.

இந்த ஆண்டு **Harvest Festival** அறுப்பின் பண்டிகை, ஸ்தோத்திர பண்டிகை இம்மாதம் 17.8.2025 அன்று நடைபெற உள்ளது.

கடந்த ஆண்டு ஸ்டால்கள் மூலமாக நல்லதொரு தொகையை திரட்டி தந்த 40 ஸ்டால் அமைத்தவர்களையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. இந்த ஆண்டு விற்பனைக்கு பொருட்கள் வாங்க கமிட்டியார் உங்களை சந்திக்க வருகிறார்கள். தாராளமாய் கொடுங்கள். பிரியாணி டோக்கன்களை ரூ. 150 செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.

இந்த விற்பனை விழாவை திரு. அருண் ஆனந்தராஜ் - வெர்ஜினா தம்பதியினர் ரிப்பன் வெட்டி திறக்க சம்மதித்துள்ளார்கள். அவர்கள் குடும்பத்தினர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கடந்த வாரத்தில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் போட்டோவில் அவர்களது தொலைபேசி எண் கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் குறைகளை சொல்லி அதை சரி செய்ய தொடர்பு கொள்ளுங்கள்.

இந்த மாதம் ஆகஸ்ட் 15ம் தேதி அன்று 75வது சுதந்திர தின விழாவை ஆசரிக்க உள்ளோம். அன்று காலை 7.30 மணிக்கு ஜெபமும் முடிந்ததும் தேசிய கொடியும் ஏற்றப்படும் அனைவரும் வந்து கலந்து கொள்ளுங்கள்.

செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆலய பிரதிஷ்டை அசனப்பண்டிகை தொடர்பாக பொதுக்குழு கூட்டப்படும் . உங்கள் கருத்துக்களை அங்கே பதிவு செய்யலாம்.

*1 மாத காலமாக தேர்தலுக்காக எங்களோடு பயணித்த வாலிப தம்பிமார் - ஆண்கள் ஐக்கியம் சங்கத்தினர்கள் பல வகைகளில் உதவிய அனைவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.*

*தேவரீர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு கோடான கோடி நன்றிகளை தெரிவிக்கின்றோம். வரும் 3 ஆண்டுகளும் எங்களோடு தோள் கொடுத்த தம்பிமார்கள் தேர்தலில் நின்று தேர்வு செய்யப்படவில்லையே தவிர அவர்களும் எங்கள் கமிட்டியினரே.*

*நாம் இந்த 3 ஆண்டுகளில் பெண்கள் ஐக்கிய சங்கம் பாடகர் குழு ஊழியம் - வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஓய்வுநாள் பள்ளி ஊழியம் - இலவச மருத்துவ ஊழியம் - இலவச தையற் பயிற்சி ஊழியம் அனைத்தும் செயல்பாடுகளில் மேலும் சிறப்பாக செயல்பட்டு ஊழியம் மேம்பாடடையும்.*

*கடந்த 1997 முதல் 2022 வரை 25 ஆண்டுகள் இந்த ஆலயத்தில் பணியாற்றிய எங்களுக்கு மேலும் 3 ஆண்டுகள் ஆலய பணிகளை சிறப்பாய் செய்து கர்த்தரின் நாமத்தை உயர்த்த - மேன்மைபடுத்த தேவன் தாமே அருள்புரிவாராக. 10 கமிட்டியாரை கொண்டு தேவன் இந்த ஆலயத்தில் பெரிய காரியங்களை செய்யப் போவதற்காக அவருக்கு முதற்கண் நன்றி சொல்லுவோம்.*

***தேவன் தாமே ஒவ்வொருவரின் குடும்பங்களையும் அவர்களின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.***

இப்படிக்கு
**J. A. PARAMANANTHAM**
ஆலய பொருளாளர்
94430 03002

## சபை மக்களுக்கு ஒரு அறிவிப்பு

**ஒரு சிலர் நம் சபை மக்களில் பலரிடம் லட்ச கணக்கில் வசூல் செய்ததாக கேள்விப்படுகிறோம். அந்த பணங்கள் ஆலயத்துக்கு வரவில்லை. அது எங்கே போனது? ஒருவேளை பணம் கொடுத்திருந்தால் கேட்டு ஆலய ரசீது வாங்கவும். ஆலய கமிட்டியின் அனுமதி பெற்று ஆயர் சிபாரிசு கடிதம் தந்தாலொழிய யாரும் யாருக்கும் பணம் கொடுக்க வேண்டாம். கொடுக்கின்ற பணத்திற்கு ஆலய ரசீது பெற்று கொள்ளுங்கள்.**

PRAYER BRINGS VICTORY



ASK IT WILL BE GIVEN

# ஒவ்வொரு நாளுக்கான ஜெபக்குறிப்பு

**ஆகஸ்ட் 1**

கோவையின் மையப்பகுதியில் தேவன் நமக்கு கொடுத்த இந்த ஆலயத்திற்காக ஜெபிப்போம். 6000 பேர் கொண்ட இந்த சபை மக்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. பரிசுத்த ஆவியானவரின் ஆளுகை இந்த ஆலயத்தில் தொடர நாம் நம்மை கர்த்தருக்கு ஒப்புவிப்போம்.

**ஆகஸ்ட் 2**

நமது திருச்சி ரோடு ஆலயத்தின் மூலமாக எத்தனை ஊழியங்களை தாங்குகிறோம். அந்த ஊழியங்களுக்காக நாம் ஜெபிப்போம். 24 மிஷனெரி ஸ்தாபனங்கள் மூலம் 104 மிஷனெரிகளை தாங்குகிற நாம் அந்த எண்ணிக்கையை 200 மிஷனெரிகளாக மாற்ற திட்டமிட்டுள்ளோம். சபையார் ஒத்துழையுங்கள்.

**ஆகஸ்ட் 3**

கிறிஸ்துநாதர் ஆலயத்தில் பணியாற்றவும் திருச்சபை மக்கள் மீதும் ஆலயத்தின் மேலும் கரிசனை உள்ளவர்களாகவும் 3 ஆயர்களை நமக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பணிகளை சீராக செய்யவும் உற்சாகமாய் சபை மக்களாகிய ஆடுகளை வழி நடத்தி செல்லும் நல்மேய்ப்பர்களாக விளங்கவும் நாம் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 4**

புதிதாக 2025-2028 ஆண்டுகள் பணியாற்ற தேர்வு செய்யப்பட்டுள்ள பாஸ்ட்ரோட் கமிட்டியார் டயோசிசன் கவுன்சில் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம். இவர்களை கொண்டு ஆண்டவர் மிகப் பெரிய காரியங்களை செய்யவும் அவரவர்க்கு கொடுக்கப்படுகிற பணிகளை நேர்மையாவும் மேன்மையாகவும் செய்யவும் அவர்களின் குடும்பத்தினறக்காகவும் நாம் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 5**

நமது ஆலயத்தில் பணியாற்றும் ஆலய பணியாளர்களுக்காக நாம் ஜெபிப்போம். தேவாலயத்தில் அவர்கள் உண்மையாயும் உமக்குப் பிரியமான காரியங்களை மட்டும் செய்யவும் ஜெபிப்போம் அவர்கள் குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 6**

இன்று கர்த்தர் மறுரூபமான திருநாள் இன்று காலை 7 மணிக்கு பரி.திருவிருந்து ஆராதனை நடைபெறும். கர்த்தரின் முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று. அப்பொழுது மேகத்திலிருந்து வந்த சத்தம் இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்;இவருக்கு செவி கொடுங்கள் என்ற சத்தம் கேட்டது. இதை வாசிக்கிற நாமும் உண்மையாய் அவரை ஏற்று கொண்டு பாவமான வாழ்க்கையிலிருந்து விலகி மீட்கப்பட்டு அவருடைய வஸ்திரம் வெளிச்சமாயிருந்ததைப் போல நாமும் ஒளி வீச ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 7**

இன்று வியாழன் காலை 7 மணிக்கு திருவிருந்து ஆராதனை உண்டு. இதில் பங்கு பெற்று அனைவரும் தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்.

**ஆகஸ்ட் 8**

இன்று 2 வது வெள்ளிக்கிழமை இன்று இரவு 10.30 மணி முதல் அதிகாலை 5 மணி வரை முழு இரவு ஜெபக்கூட்டம் நடைபெறும். இதில் விசேஷமாக சென்னையை சேர்ந்த பிரதர் சரவணன் அவர்கள் செய்தி கொடுத்து நம்மை ஜெபத்தில் வழி நடத்தி செல்வார்கள். இதுவரை வராதவர்கள் ஜெபிக்க வாருங்கள்.

**ஆகஸ்ட் 9**

இன்று சனிக்கிழமை இந்நாளில் விசேஷமாய் துயரப்படுகிறவர்கள் துன்பப்படுகிறவர்களுக்காய் ஜெபிப்போம். உலகத்திலே உபத்திரவங்கள் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்று சொன்ன ஆண்டவர் நமக்கிருக்கும் போது அனைத்து பிரச்சனைகளையும் லேசாக கடந்து செல்ல கருத்தாய் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 10**

இன்று ஒய்வுநாள். இந்நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க கொடுக்கப்பட்ட கற்பனை. அன்று நாம் உலகப் பிரகாரமான காரியங்களை செய்வதை நிறுத்தி குடும்பமாய் ஆலயம் சென்று அவரை போற்றிப்பாடி அவரது செய்தியை கேட்போம். அப்பொழுது அவர் நாமம் மகிமைப்படும். அப்போது அவர் வந்து நம் அனைவரையும் ஆசீர்வதிப்பேன் என்று வாக்கருளியிருக்கிறார். அவர் வாக்கு மாறாத தெய்வம். நிச்சயம் சபையில் வந்து தங்கி தாபரிப்பார். அதற்கு ஒய்வுநாளை பயன்படுத்துவோம். அந்த வாரம் முழுவதும் ஆண்டவர் எத்தனை நன்மைகளை நமக்கு செய்திருக்கிறார். அதற்கு நன்றி சொல்ல வேண்டாமா? வாருங்கள் தோத்திர பலியை அவருக்கு செலுத்துவோம்.

**ஆகஸ்ட் 11**

இன்று திங்கட்கிழமை நமது சபையில் அநேகர் வியாபாரிகள் நீங்கள் வாரத்தின் முதல்நாளில் ஆலயம் வந்து ஜெபித்து உங்கள் கடைகளை திறந்து பாருங்கள். பெரிய வித்தியாசத்தைக் காண்பீர்கள்.

ஆகஸ்ட் 12 ஆஸ்பத்திரிகளிலும், வீடுகளிலும் நோய்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்டு போராடிக் கொண்டிருக்கிற இவர்களுக்காய் கருத்தாய் ஜெபிக்க வேண்டியது நாம் அல்லவா? விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் வேத வசனம் சொல்கிறது. மருத்துவ சிகிச்சைக்காக காத்திருக்கிற மக்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 13**

நம் வீட்டை சுற்றியுள்ள எதிரிலுள்ள அண்டை அயலார் ஆகிய புறஜாதி மக்களுக்காய் நாம் ஜெபிப்போம். அவர்களுடன் பழகி கிறிஸ்துவின் அன்பை நாம் பகிர்ந்து கொள்வோம்.

**ஆகஸ்ட் 14**

இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு பரி. திருவிருந்து ஆராதனை உண்டு. அநேகர் பங்கு பெற்று இறையாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்.

**ஆகஸ்ட் 15**

இன்று இந்தியாவின் 78வது சுதந்திர திருநாள். காலை நம் ஆலயத்தில் ஆராதனையும் 8.30 மணிக்கு கொடியேற்றமும் நடைபெறும். இந்திய சுதந்திரத்திற்காக போராடின தலைவர்களை நாம் மறந்து விட்டோம். இப்படி பாடுபட்டு அஹிம்சா வழியில் வாங்கின சுதந்திரத்தை நாம் அனுபவிக்கிறோமா? இல்லை பல்வேறு தடைகள். பேச்சுரிமை-தேசபக்தி - ஜாதிகள் வேறுபாடு - மதங்கள் வேறுபாடு - மொழிகளின் வேறுபாடுகள் மூலமாக நாம் இலவசமாக பெற்ற சுதந்திரத்தை இழந்து விட்டோம். 2026 தேர்தல் மூலம் மதசார்பற்ற ஆட்சி அமையவும் இந்தியர்கள் அனைவரும் ஒன்றே என்று கூறி கூடி வாழ்வோம்.

**ஆகஸ்ட் 16**

இன்று சனிக்கிழமை விசேஷமாய் ஏழைகள் திக்கற்றோர்-விதவைகள் அநாதைகள் ஆகியோரின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். காகங்களை போஷித்த ஆண்டவர் இவர்களைப் போஷிக்கவும் ஆகாயத்து பறவைகளை உடுத்துவிக்கிற ஆண்டவர் இவர்களை உடுத்துவிக்கவும் ஏழைக்கு இறங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்ற வேத வசனத்தின்படி நாம் அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ய நல்ல மனதை ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக.

**ஆகஸ்ட் 17**

ஞாயிறு இன்று நம் ஆலயத்தின் தோத்திரபண்டிகை. அறுப்பின் பண்டிகை ஆண்டவர் கடந்த ஆண்டு முழவதும் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் செய்த நன்மைகளுக்கு பதிலாக நாம் நமது முதற்கனிகளையும், பொருட்களையும் நன்றி காணிக்கைகளையும் கொண்டு வந்து ஆலய பலி பீடத்தில் சமர்ப்பியுங்கள். அன்றைய ஆராதனைகளிலும், விற்பனை விழாவிலும் கலந்து கொண்டு உற்சாகமாய் பங்கு பெறுங்கள். தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச்செல்லுங்கள்.

**ஆகஸ்ட் 18**

நாம் நம் சபை மூலம் 104 மிஷனெரிகளை அனுப்பியுள்ளோம். கோவை திருமண்டலத்தில் மிஷனெரிகளை உற்பத்தி செய்யும் Factory ஆக நம் ஆலயம் உள்ளது. இதை 200 ஆக உயர்த்திட திட்டமிட்டுள்ளோம். புதிதாக ஒரு மிஷனெரியை தாங்க விருப்பமுள்ளவர்கள் ரூ.3000/- மாதா மாதம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுங்கள்.

**ஆகஸ்ட் 19**

இன்று உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள், போர்கள், இயற்கையின் சீற்றங்களைப் பார்க்கும் போது கடைசி காலத்திற்கு நாம் வந்துவிட்டோம் என்ற உள் உணர்வு வெளிப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் 2ஆம் வருகை நிச்சயம். சபையே விழித்தெழு. நம்முடைய பாவங்களை அவர் கரத்தில் ஒப்புவித்து இரக்கம் பெறுவோம். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள நம்மை நாமே ஆயத்தப்படுவோம் மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.

**ஆகஸ்ட் 20**

இந்தியா பாகிஸ்தான் - சீனா நாடுகளுக்கு மத்தியிலுள்ளது. தினசரி எல்லை மீறல்கள் நடைபெறுகின்றன. அவரவர் எல்லையில் அவரவர் நிலை நிறுத்தப்படவும் சுமூக தீர்வுகளை ஏறெடுத்து அமைதியை நிலைநாட்டவும் நாம் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 21**

நம் பாரத தேசத்திற்காக ஜெபிப்போம். இன்று நாடெங்கும் மத வெறி - மொழி வெறி - இனவெறிகளால் தேசம் துண்டு துண்டாக பிரிந்துள்ளது. வரப்போகிற 2026 தேர்தலுக்காக நாம் இப்போதிருந்தே ஜெபிப்போம். எவ்வித கலவரமுமின்றி தேசம் அமைதி காக்கவும் 534 MPக்களில் கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டோர் நீக்கப்படவம் கறைபடாத கரங் கொண்ட நல்ல தலைவர்கள் போட்டியிடவும் ஒற்றுமையை காத்திடவும் மதசார்பற்ற ஆட்சி அமைந்திடவும் Seculiar Govt நாம் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 22**

இன்று சைனாவில் வெள்ளம்-ரஷ்யாவில் வெள்ளம்

அமெரிக்காவில் வெள்ளம் - ஈரான் ஈராக் இஸ்ரவேல் நாடுகளில் போர் - ரஷ்யா - உக்ரைன் நாடுகளில் படுகொலை நடைபெறுகிறது. மனிதனை மனிதன் அழிக்கும் ஈனச்செயல் நடைபெற்று வருகிறது. உக்ரைன் மக்களின் அடிப்படை உரிமைகள் மீட்கப்பட அவர்களது பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட நாம் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் 23**

இன்று உலகில் மனிதாபிமானம் செத்துப் போனது. ரோட்டில் அடிபட்டு கிடப்பவரைக்கூட யாரும் கண்டு கொள்வதில்லை. வேகமான உலகில் வேகமாய் போய் கொண்டிருக்கிறோம். உண்மையான கிறிஸ்தவர்கள் எப்போதும் நல்ல சமாரியர்களே ஒரு சிலராவது உதவி செய்ய வேண்டும்என்பதால் தான் இன்றைய உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது.

**ஆகஸ்ட் 24**

இன்று பரிசுத்த பர்த்தொலேமேயுவின் திருநாள். காலை 7மணிக்கு பரி.திருவிருந்து ஆராதனை நடைபெறும். அநேகர் பங்கு பெறுவது நல்லது நாமும் அப்போஸ்தலனாக வாழ்ந்து கர்த்தரின் நாமத்தை உயர்த்துவோம்.

**ஆகஸ்ட் 25**

தங்கள் பிறந்த நாளையும் திருமண நாட்களையும் கொண்டாடுகிறவர்கள் யாருக்கும் கேக் கொடுக்க வேண்டாம். மிட்டாய் தர வேண்டாம். ஆலயத்தில் ஆயர் எழுந்து நில்லுங்கள் என்று சொல்லும் போது வெட்கப்படாமல் எழுந்து நில்லுங்கள். பாடகர் குழு ஒரு பாட்டின் மூலம் உங்களை வாழ்த்துவார்கள் முடிந்தால் அத்தனை பேரும் ஆல்டரில் வந்தால் கர்த்தரின் ஆசீர்வாதம் உங்களுக்கு நிச்சயம் உண்டு.

**ஆகஸ்ட் 26**

இன்றைய பள்ளிகளில் 1 முதல் +2 வரை பாட புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் ஏராளம். அன்றன்று பாடங்களை நம் பிள்ளைகள் அன்றன்று செய்து முடிப்பது நல்லது. பெற்றோர் அவர்களை கடிந்து கொள்ளாதீர்கள். தட்டி கொடுத்து அவர்களை படிக்க வையுங்கள்.

**ஆகஸ்ட் 27**

வேத புத்தகத்திலே தேவன் வெறுக்கும் இரண்டு பாவங்களில் ஒன்று விக்கிரக வழிபாடு மற்றொன்று விபச்சாரம் இன்றைய செய்தித்தாளிலும் TVக்களிலும் இந்த கலாச்சாரத்தால் மனைவி கணவனிடையே தர்க்கங்கள் போராட்டங்கள். முடிவோ மரணம் தற்கொலை. வருங்கால சந்ததியினரை பெற்றோராகிய நாம் கண்டித்து வளர்க்காவிட்டால் அவர்கள் நிலை ஐயோ!

**ஆகஸ்ட் 28**

இன்று எந்த பக்கம் பார்த்தாலும் குழிகள்

தோண்டப்படுகின்றன மூடப்படுவதில்லை ரோடுகள் நிலை பரிதாபம். தரமான பொருட்களால் ரோடுகள் போடுவதில்லை. காண்டிராக்டர்கள் ஏதோ கருப்பு நிறத்தில் ரோடு என்று போடுகிறார்கள். அது ஒரு மழைக்கு கூட தாங்குவதில்லை. அதில் பயணம் செய்யும் 2 வீலர்களில் செல்வோர் ஹெல்மெட் அணிந்து குறைவான வேகத்துடன் பயணிக்கவும் ரோடு வசதியில்லாததினால் 4 வீலர் வாகனங்களில் செல்வோருக்கு பாதுகாப்பில்லை. தினமும் எத்தனை விபத்துக்கள் தயவு செய்து இரவு பயணம் செய்வோருக்காக நாம் ஜெபிக்க வேண்டும். 1 வினாடி தூக்கம் கண்களை மூடி விட்டால் இழப்பு நமக்குத் தான் இரவு 10 மணிக்குள் நீங்கள் போய் சேர வேண்டிய இடத்தை சென்று அடைந்து விடுங்கள்.

**ஆகஸ்ட் 29**

இன்று 5 வது வெள்ளிக்கிழமை இன்று காலை 10.30 மணி முதல் மதியம் 2 மணி வரை உபவாச ஜெபக்கூட்டம் நடைபெறும். இரவு 6.30 மணி ஆராதனையில் மிஷினெரி மக்களுக்காய் ஜெபிக்க நமக்கு ஒதுக்கப்பட்ட ஆராதனை அதில் பணித்தள செய்திகள் அறிவிக்கப்படும். அவர்களின் தேவைகளுக்காய் ஜெபிப்பார்கள். இரவு 10.30 மணி முதல் 12 மணி வரை இரவு ஜெபம் நடைபெறும்.

**ஆகஸ்ட் 30**

இன்றைய உலகில் நாம் கையில் கட்டியிருக்கும் Watchக்கு கூட கியாரண்டி உண்டு. ஆனால் நம் ஆயுசு நாட்களுக்கு கியாரண்டி இல்லை நாம் வெறுமையில் வந்தோம், படித்தோம், வேலை செய்து உழைத்தோம், வீடு, கார், நிலபுலன்களை வாங்கினோம். ஆனால் இரவு படுக்கைக்கு வரும் நாம் காலையில் எழுந்திருப்போம் என்ற நம்பிக்கை உண்டா? இல்லை. ஆகவே வாழ்கிற நாட்களில் நற்கிரியைகளைச் செய்து புண்ணியங்களை சேர்த்து கொள்ளுங்கள். நாம் போகும் போது ஒன்றும் கொண்டு போக முடியாது. மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள், கார், பங்களா. நகைகள் ஒன்றையும் நாம் எடுத்து செல்ல முடியாது. ஆகவே வாழ்கிற நாட்களில் தான தர்மங்களை செய்யுங்கள். எந்த நேர அழைப்பு வந்தாலும் அழைப்புக்கு ஆயத்தமாயிருங்கள் மனந்திரும்புங்கள்.

**ஆகஸ்ட் 31**

இன்று 5வது ஓய்வுநாள் இன்று நம் ஆலயத்தில் துதி ஆராதனை Praise & Workship ஆராதனை நடைபெறும். கர்த்தர் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் செய்த நன்மைகளை நினைத்து அவரை துதித்து பாடி செய்த நன்மைகளுக்காக உற்சாகமான காணிக்கைகளை அவர் சந்நிதியில் கொண்டு வந்து படையுங்கள்.

**கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.**

# 2025 ஆகஸ்ட் மாதத்திற்கான ஆராதனை ஒழுங்குமுறைகள்

| | | |
|---|---|---|
| 03.08.2025 ஞாயிறு | காலை 6.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. J. Suresh Kumar |
| | காலை 7.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. A. Sargunam |
| | காலை 9.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. D. Rajendra Kumar |
| | மாலை 6.30 மணி மாலை ஆராதனை | Rev.M. Moses Rux |
| 10.08.2025 ஞாயிறு | காலை 6.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. D. Rajendra Kumar |
| | காலை 7.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. J. Suresh Kumar |
| | காலை 9.30 மணி காலை ஆராதனை | Rev. A. Sargunam |
| | மாலை 6.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. D. Rajendra Kumar |
| 17.08.2025 ஞாயிறு Harvest Festival | காலை 6.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. A. Sargunam |
| | காலை 8.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. D. Rajendra Kumar |
| | மாலை 6.30 மணி மாலை ஆராதனை | Rev. J. Suresh Kumar |
| 24.08.2025 ஞாயிறு | காலை 6.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev.M. Moses Rux |
| | காலை 7.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. A. Sargunam |
| | காலை 9.30 மணி காலை ஆராதனை | Rev. J. Suresh Kumar |
| | மாலை 6.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. Johnson Barnabas |
| 31.08.2025 ஞாயிறு | காலை 6.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. J. Suresh Kumar |
| | காலை 7.30 மணி பரி. திருவிருந்து ஆராதனை | Rev. A. Sargunam |
| | காலை 9.30 மணி காலை ஆராதனை | Praise & Worship |
| | மாலை 6.30 மணி மாலை ஆராதனை | Rev.D.Rajendra Kumar |

### குறிப்பு

- ✶ அனைத்து செவ்வாய் கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு திருமறை ஆய்வு (Bible) Study) நடைபெறும்
- ✶ அனைத்து புதன்கிழமைகளிலும் காலை 10.30 மணிக்கு பெண்கள் ஐக்கிய சங்கக்கூட்டம் நடைபெறும்.
- ✶ அனைத்து வியாழக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு பரி.திருவிருந்து ஆராதனை நடைபெறும்.
- ✶ வியாழக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு இல்ல ஜெப கூடுகை (காட்டேஜ் பிரேயர்) நடைபெறும். தங்களது இல்லங்களில் ஜெப கூடுகை வைக்க விரும்புவோர் முன் கூட்டியே ஆலய குருவானவரை தொடர்பு கொண்டு தெரிவிக்க கேட்டு கொள்கிறோம்.
- ✶ அனைத்து வெள்ளிகிழமைகளில் காலை 10.30 மணி முதல் 2.30 மணி வரை உபவாச ஜெபமும் மாலை 6.30 மணிக்கு வெள்ளி சிறப்பு ஜெபமும் நடைபெறும். இரவு 10.30 மணிக்கு ஜெபக்கூட்டம் நடைபெறும்.

## 2025 ஆகஸ்ட் மாதத்தின் சிறப்பு திருநாட்கள் சிறப்பு ஆராதனைகள்

| நாள் | விபரங்கள் |
|---|---|
| 06.08.2025<br>புதன் | காலை 7.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை<br>கர்த்தர் மறுரூபமான திருநாள் |
| 15.08.2025<br>வெள்ளி | காலை 7.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை<br>காலை 8.00 சுதந்திரதின கொடியேற்றுதல் |
| 24.08.2025<br>ஞாயிறு | காலை 7.00 மணி பரி. திருவிருந்து ஆராதனை<br>அப். பரி. பர்தொலொமேயுவின் திருநாள் |

## 2025 ஜூன் மாதம் நடைபெற்ற ஞானஸ்நானங்கள்

| | |
|---|---|
| 29.06.2025 | Clarissa Lenora |

ஜெபம் : ஞானஸ்நானத்தின் மூலம் சபையின் அங்கமாகிய இக்குழந்தைகள் தேவகிருபையாலும் ஞானத்தினாலும் வளர்க்கப்பட்டு ஞானப்பெற்றார் இவர்களை திடப்படுத்தி திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுத்தும் படி நாம் ஜெபிப்போம். ஆமென்.

## 2025 ஜூலை மாதம் நடைபெற்ற திருமணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | 09.07.2025 | John Rathish Rohith. A & Rene Keziah.L |

ஜெபம்

மணமக்களை ஆசீர்வதித்த தேவன் தாமே, தம்பதிகளின் இல்லற வாழ்வையும், வாக்குறதியை நிறைவேற்றுகிற பெலத்தையும் தந்து நன்மைகளால் இவர்கள் நிரப்பப்பட சபையாராகிய நாம் ஜெபிப்போம். ஆமென்

## 2025 ஜூன் & ஜூலை மாதம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | 25.06.2025 | Mrs. D. Regina |
| 2. | 14.07.2025 | Mr. Asir Manikavasagam |
| 3. | 20.07.2025 | Mr. Johnson Theoder Jacob. S |
| 4. | 28.07.2025 | Mrs. Gnanam |

ஜெபம்

தேவன் தாமே அருமையானவர்களை இழக்கக் கொடுத்த குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தேறுதலையும் கட்டளையிடுவாராக. ஆமென்

## வியாழன் வீட்டு ஜெபக்கூட்டம்

| | | |
|---|---|---|
| 1. | 07.08.2025 | Mr. J. A. Paramanantham |
| 2. | 14.08.2025 | Mr. S. N. Jacob |
| 3. | 21.08.2025 | Mr. Arun Anantharaj |
| 4. | 28.08.2025 | Mr. Adam Appadurai |

**நம் சபை மக்களில் அநேகர் வியாழன்கிழமைகளில் குடும்ப ஜெப கூட்டம் நடத்த விரும்புகின்றனர். விரும்புவோர் உங்களது பெயர், விலாசம், மொபைல் எண்களை ஆலய குருவானவரிடம் தெரிவிக்கவும். ஆலய அறிவிப்புகளில் அறிவிக்கப்படும்.**

## இந்த ஆகஸ்ட் மாதத்தில் பிறந்த நாளைக் கொண்டாடும் நம் சபை மக்களுக்காக ஜெபிப்போம்




அன்புள்ள ஆண்டவரே. இவர்கள் ஆயுசு நாட்களில் மற்றுமோர் பிறந்த நாளைக் காணச் செய்த கிருபைக்காக நன்றி. இந்தப் பிறந்த நாட்களில் இவர்கள் கடந்த ஆண்டைவிட மேலும் ஆசீர்வதிக்கப்படும்படி இவர்களுக்காய் மன்றாடுகிறோம். உம்முடைய தெய்வீக கிருபையினாலே இந்த ஆண்டில் ஒவ்வொரு நாளையும் ஆசீர்வாதமாய் பெற்றுக்கொள்ள இவர்களுக்கு உதவி செய்யும். நாசி மோசங்களுக்கு விலக்கிக் காத்துக்கொள்ளும். அநேகம் பிறந்த நாட்களைக் காணவும் குடும்பமாய் கொண்டாடவும் அருள்புரியும். ஆசீர்வதியும், காத்துக் கொள்ளும். இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம் நல்ல பிதாவே ஆமென்.

**பிறந்த நாள் –திருமண நாட்களைக் கொண்டாடுவோர் ஆலயத்தில் கடவுளுக்கு முன்பாக எழுந்து நின்று சபையாரின் வாழ்த்துகளைப் பெற்றிடுங்கள்**

### 1ST AUG
Mr THAVASINGH JOHNSON J
Mrs JEYARANI B
Mr STEPHEN THANASEKAR J
Mr AUGUSTUS P.E
Mrs JEYANTHI
Mr SURESH KUMAR S
Mrs JANCY RANI ASARIA
Mrs PONRANI S
Miss CHUNAUTI
Mr RUBAN RANJITH S
Mr DANIEL JAYASURYA E
Miss JANE MELINDA
Miss SHIRLEY RUTH
Mast LUCAS MATTHEW R

### 2ND AUG
Mr BALACHANDRAN B.P
Mr DEVARAJ A
Mrs REETA PONRANI
Mr FRANK S
Mr LAWRENCE S
Mrs JESSIE D
Mrs SOPHIA PRASHANTHI S
Mr RAJESH KUMAR A
Mrs JASMINE JENIFER S
Mrs YAMUNA L
Mr JOSEPH NEIL.A
Mrs JENUSHMA J
Mrs GODLIN BEULA M
Mrs ABISHA NANCY S
Miss PAARKAVI B
Mr ALLWIN ALEN BADER S
Ms ANJALI PRIYA R
Mr PHILIP RAJU S
Ms VARSHA VINCY A
Ms ASHLIN JESHENITHA V

### 3RD AUG
Mrs LEELATHANAM N
Mrs ROSELIN D
Mrs JOHNS MARY D
Mr JOEL AUGUSTIN
Mrs SAGUNTHALA VINCENT
Mrs JEYA BEULAH
Dr JASMINE SELVAKUMARI JEYA I
Mr VIJAY ANAND JEYARAJ V
Mr MARK SAMUEL J
Mrs FELCIA P
Mrs ANITHA REXLIN G
Mr ROBERT RAJADURAI J
Mrs MERLIN FLORA
Ms MERLIN PENITA
Mr PRADEEP KUMAR R
Mrs GINSA DEVIS D
Mr KEVIN JACOB S
Ms NEETHI JACULINE A
Mrs PREETHI CAROLINE.A
Ms JEEVIKA FLORIS K
Miss JOHNA KATLIN J
Miss DAFFLIN
Mast STARWIN GADDIEL S
Mast JERSON SAMUVEL J
Mast GABRIAN JUDAH

### 4TH AUG
Mrs NAGOMI SOLOMON
Rev SAMUEL JOHNSON S
Mr THANGARAJ T
Mrs JEBA VINCENT
Mr SAM RAJ KUMAR D
Mr RAMESH BABU J.C
Mr PARINBARAJ D
Mr BELFIN RV
Mrs SHEELA STEPHEN
Mr VARUN DAVID A
Mrs STELLA PRIYA S
Mrs JENCY FLORA J
Mrs EBINEZER SMRREGIN PANDIAN J
Ms JENNIFER ROSE A
Mr HARRIS SAMUEL RAMSAY S
Miss AUGUSTA CAROL P
Ms JOANNA BLESSY J

### 5TH AUG
Mr SANTHOSAM V
Mr MEHANATHAN S
Mrs MANGALARANI R
Mr BALASUNDARAM A
Mrs JANSI JEBARAJ
Mr SELVIN J
Mr AGESTES JOHN A
Mr SAMUEL RAJKUMAR J
Mrs PACKIALATHA I
Mrs GNANAM VASUKI RAJAN
Mrs BERCY VIJAYASEELI
Mr DAVID RAJESH
Mr JACKSON SATHISH KUMAR
Mrs SUDHA B
Mr DANIEL ABRAHAM G
Miss GINAA PAULINE V
Miss SHIMONA S
Mr KENNY ROZAR S
Mr JERSON MARK S
Mast PAUL NICHOLAS
Mast JAYASINGH S
Mast BENNETT YANNICK P

### 6TH AUG
Mr SUDHAN APPADURAI M N
Mr RAJENDRAN P
Mrs PRISCILLA SUNDARY T
Mrs SHANTHI LEELE PUSHPAM
Mrs RATHANA CHRISTY V
Dr WILLIAM VASANTHA SEKAR V.P.V
Mrs RUBY PETER I
Mr JASKING K
Mrs JEBA K
Mrs JENCY M
Mr GIPIYON P
Mrs ANGELA DORCAS J
Mr PRATAB JEBAKUMAR J
Mr JOHN PAUL J
Mrs JASMINE ASNATH DEBORAH
Mrs SWEETY MIRANDA A

Mr SHANKOO DINU DENNIS
Mrs JOSELIN ZIBLA J
Mr ALLEN A K
Mr NELSON J
Miss HANNA PRISCILLA EWIN SAMSON KMRANANDHA JOHN KIRUBA
Mast JYAKIM IAN SHASHAK
Miss SHANE J
Miss JAYLENE DARINA

### 7TH AUG

Mrs KAMALA SIMEON
Mr JOHN ROSE A
Mr JEYAKUMAR D
Mr YOVAN PATTURAJA M
Mr ARAVENDHAN A
Mrs SUDHA K
Mrs ARUMAI MARYAUGUSTA.S.J
Ms MERCY AUGESTINA.P
Mrs BHAGYARATHI SALOME
Mrs MIRIAM PAUL
Miss JESSICA MERLIN E
Mast RASHVIK JOSEPH R

### 8TH AUG

Mr KANAGARAJ T
Mr STANLEY CHARLES
Mrs ANBU SANTHAM D
Mr ALEX NIRMAL SINGH S
Ms SHIREEN COX
Mrs CYNTHIA RENIKUMAR
Mrs JOICE SARANYA S
Mrs RACHEL ELIZABETH
Mr DEEPAK JEROME D
Mast ALLEN GABRIEL C

### 9TH AUG

Mr JESUDOSS D
Mrs LATHA ISABEL
Mrs GILDA JMRSMANON MANI
Mr BAKIYARAJ A
Mr VICTOR S
Mr BALASINGH R
Mrs ANGEL B
Mr ARUN PRADISH Y.R
Mr ELIYEZER MOSES J.S
Ms MARY ESTHER RANI K
Mrs MINUSH RIYA D
Miss SUSAN STEFFIE S
Mr SHILOH PAUL
Ms PRICY M
Miss KAITLYN AMELIA
Miss JEROSHA FLORENCE V
Mast AUSTIN JERIN J

### 10TH AUG

Mr MATHIALAGAN V
Mr SOUNDARARAJ C
Mr BASKAR J
Mrs SANTHINI A
Mr PONSUNDAR J
Mr KOILRAJ .Y.S
Mr ARMSTRONG IMMANUEL
Mr AUGUSTIN EDWARD PON THOMAS
Mr SATHISH PRADEEP D
Mr GNANARAJ ROBIN S
Mrs DIVYA PRABHA K L
Mrs JABESTA INBALATHA J G
Miss ANGELINE JEYA SWETHA
Mr JOHN ARNOLD H
Miss DHYANA CAINE
Miss CHARISA

### 11TH AUG

Mrs RAJAMMAL M
Mrs JAYARANI BALAKUMAR
Mr JEYAPRAKASH J
Mrs JEYANTHI AUGUSTABAI
Mr THANGAPANDI GNANARAJ K
Mrs HEPZIPA
Mr IMMANUEL GNANASUNDAR G
Mr PRABAKAR S
Mr GNANASELVAN J
Mr EDWIN MOSES J
Mrs EVANGELINE HEBZIBAH JENIFER
MR PRAVEEN
Mr JACOB PUSHPARAJ.A
Mrs BLESSY VINCENT
Mr PAUL JOHN SAMSON
Mr JERVIN ANANTHARAJ C
Miss SUJINA J
Mr REGILIN STEPHEN S
Miss BETSY SEELI P
Miss JERSHA PONSELVI J
Mr ALAN JOSHUA A
Mr AUSTIN CHRISTOPER R
Mr JONAS J
Miss CLARINDA D

### 12TH AUG

Dr GEORGE SUNDARRAJ
Mrs JEBA CHANDRA S
Mrs PREMA DHARMACKAN
Mr DAVID KIRUBAKARAN R
Mrs PONMANI
Mrs JESSY M
Mrs HILDA JOY KALAICHELVI
Mrs AUGUSTA ANBU M
Mrs ESTHER SILVANAS.S
Mrs LILLY P
Dr SANGEETHA K
Mrs ROBESTA JELIN K
Mrs SUDHA STELLA MARY J
Mrs HELEN PRABHA J
Mr STEPHEN PONRAJ
Mr JEFFERY SMITH
Mrs JAYA JENIFER J
Mr BLESSWIN SAM JACOB
Miss CHARU PRABHA
Mr DEVA NITHIN DANIEL B
Mast JEFFIN D

### 13TH AUG

MRS DURAIKANI
Mr JOHN DHARMARAJ S
Mrs JEBAKANI S
Mr EDWARD PAULRAJ I
Miss STELLA P
Mrs PONMARY S
Mrs CHERUBA
Mr DENNISE SAM GAAR I
Mr JOHN SAMUEL J
Mrs MELBA REUBEN
Mrs AUGUSTINA J
Miss JAFFRIN JENIFER
Miss BHAVENA SUNSHINY S
Miss SALSIYA SALOMI SHOBA J
Miss PAULIN RACHEL R
Mr JITHIN SAMUEL G

### 14TH AUG

Mrs JAYA ABRAHAM
Mr GNANASINGH D
Mr ARULRAJ V
Mrs SELVI
Mr SATHYA RAJ NADAR D
Mr VIJAYAKUMAR S
Mrs ESTHER RADHA
Mrs JENIFER RAJA
Mr JOHN M
Ms PRINITA CHRISTENE P
Ms PRINILA IRENE P
Mr SAMUEL JASON J
Mrs EVANGELIN KIRUBA
Ms VINITHA STALIN
Ms SHEELA K
Mr MOSES ALLWINRAJ M
Mast PATICK THEODON

### 15TH AUG

Mrs SELVAM
Mr DAVID PETER
Mrs PONNAMMAL K
Mr KOVILPILLAI D

Mrs JYOTHI T
Mrs JAYASEELI J
Mr KANNIAN J
Mr PATTUPITCHAI S
Mr JEYAKANTH SUTHANTHIRAKUMAR.
Mr JAMES GUNASEELAN
Mr SUTHANTHIRAKUMAR
Mrs VALARMATHI S
Mr MOSES SUTHANTHIRA KUMAR S
Mr SATHISHKUMAR
Mrs PAULINE J C
Mrs JANSI EBANESAR
Mr SELLA KUMAR C J
Mr PAUL GUNASEKERAN B
Mr CHARLES GODWIN P
Mr RANJAN RAJENDRA R
Mast JASWIN SAMUEL
Mast MATHEWS WILSON

## 16TH AUG

Mrs VASANTHAKUMARI
Mr JOHN KARUNAKARAN D
Mr SANTHANA RAJ K
Mr SELVARAJ Y
Mr KOILRAJ J
Mrs EVANGELINE R
Mr BENJAMIN FRANKLIN S
Mr RUBAN P
Mrs SELVA RANI Y
Mr IMMANUEL J
Mrs SOWMIYA R
Mr NICKSON PREM KUMAR P
Dr ADLIN SMITHA A
Mrs JENEFER MARTIN
Ms JUILET REBEKAL M
Mrs JENIPHA PRISCILLA A
Mrs JENIFA JULIET REBEKKAL
Mr ISSAC YESUDHAS
Miss SHENIKA SHALU S
Mr BLESSON JOHN S
Ms JOS SHERLYN A.J
Mr JADEN DAVIDSON V

## 17TH AUG

Mrs MENAKA GEORGE
Mrs DAISY SIMON
Mrs ANNAL JEBAKANI A
Mrs GNANABAI NELSON R
Mr DAVID D
Mr SELVIN A
Mr LAWRANCE R
Mrs DELSY PAULINE JOSHUA
Mrs JEBA M
Mrs SWEETY MERCY P
Mr GODWIN GNANAMANI
Mr RAVIKUMAR ABRAHAM P
Mrs LEETHIYAL C
Mr PRAVEENSON J
Mrs GNANADEEPAM MANJULA A
Ms ANGEL PMrMANO JASHUVA J
Mr VANCE MERVIN C
Mr ALWYN SMITH APPADURAI
Mr ALGAIN JONATHAN PANDIAN W
Mr ALBY PAUL T.P
Miss KEZIAH ROSETTE

## 18TH AUG

Mrs PONMANI M.H
Mrs ARUMAI THANGABAI
Mr SELVENDRAN R
Mr VELLADURAI PAULRAJ K
Mr MANUEL JOHNSON V.P.V
Mr RAJA PRATHAP SHING S
Mr VIJAYAKUMAR SAMUEL E
Mr RAJESH S
Mr PERKINS JONES SAMUEL
Mrs JASMINE SUGANTHI
Ms JAYAPRABHA A
Mr ISAAC DANIELRAJ G
Mr JOSHINTH SURESH
Mr SIMYON JEBESTION Y
Mr HARIPH NITHIS PRASATH S D
Mr ROZAC HANNAN SAMUEL
Mr JOSHVA P
Mr SAMUVEL RAJAKUMAR I
Mr JEREMIAL PAUL HANS J
Miss JANATE ESTHER Y
Mast GIFTSON JACOB S

## 19TH AUG

Mr AMIRTHAM D.S
Mrs HEPSIBHA SUGIRTHA MALAR
Mr EBENEZER GANDHI D
Mrs POORNAM M
Mr SELVARAJ S
Mr KENNADY J
Mr CHRISTOPHER SAMDOSS
Mr REUBAN GNANASIGAMANI T
Mr NIJASTHA L
Mrs SELVA RATHI R
Mr BELSON J
Mr BENSON HEBREW DENVER
Ms ANITHA STELLA L
Mr MOSES T
Ms VENCY A
Miss SHAREN MIRAKLIN S
Miss SMITHA KENNETH
Mr PAUL NEHEMIAH A
Mast ARVIN KIRUBAKAR L
Miss KRISTA KEERTHANAI
MS JESLYN SALLIE

## 20TH AUG

Mrs JOY ELIZABETH
Mrs PAPPA S
Mrs SELVI REBECCA VICTORIA
Mrs SWEETY M
Mr JASPER JOHN PAUL
Mrs VASANTHI CHITHIRAIRAJ
Mr EDISON G
Mrs SHAILA KANI MOZHI
Mrs SANDHYA S
Mr VICTOR SELVARAJ
Mr SAJU C J
Miss JOANNA JERIN R
Mast JASON PERSLEY J
Mr JUDSON SAMUEL .J
Ms SHARON ALYSSA
Mast AMELIA GIANNA
Miss ZARAH

## 21ST AUG

Mrs VIJAYARANI SUSILA
Mrs GNANAPUSHPAM A
Mr MUTHURAJ EDWIN D
Mr AUGUSTIN GNANASEKAR
Mr RAJKUMAR J
Mr EVEREST JACOB K
Mr KAPILAN JOSHUA DEVADAS
Mrs GLORY VMrSUNDAR SINGH J
Mr JAYARAJ LMrMOSES AMAL DASS J
Mr JAGARATCHAGAN R
Mr EDWIN DAVID P
Mrs AUGUSTA AMRAKASH JEBIN
Mr JOHN PRABHU G
Mr JERIEL GIDEON S
Mast BABY

## 22ND AUG

Mrs AGASTI BAI G
Mr DURAIRAJ A
Mrs SELVI S
Mr PAULDOSS S
Mrs SELVAMANI A
Mr AUGUSTIN I
Mr SELVAKUMAR A
Mrs SHEELA ANAND
Mr DAVIDSON G
